விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆவணி 19 துல்ஹஃ 4 இதழ் 202
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 4 9-1981

வீடியோ படப்பிடிப்பு

திருமண வைபவங்களையும் மங்கள வைபவங்களையும் காலமெல்லாம் பார்த்து மகிழ்ந்திடும் வகையில்
வீடியோ கமரா
மூலம் படம்பிடித்து கொடுப்பவர்கள்

S. சுலைமான் கண்டு அன் பிறதர்
5-7 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம்
போன்; 265

## 4 இளைஞர்கள் பிணையில் விடுதலை

[கொழும்பு]

வெள்ளவத்தையில் கடந்த மாதம் இருபதாம் திகதி கைதுசெய்யப்பட்ட ஐந்து இளைஞர்களில் நான்கு பேர் தலா ஆயிரம் ரூபா பிணையில் நற்று விடுதலை செய்யப்பட்டனர்!

கதிரவேலு தயானந்த், பரம்சோதி பாலசுப்பிரமணியம், பரம்சோதி பரபராதன், இராசலிங்கமே யோகரூபன் ஆகிய நால்வரும் பிணை

[6-ம் பக்கம் பார்க்க]

# சுதந்திரக்கட்சி ஐக்கியத்துக்கு உண்ணாவிரத முஸ்தீபு!

## சிறிமா - அனுரா இல்லம் முன்பாக நாளை நடைபெறும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் ஏற்பட்ட பிளவு மேலும் தொடராமல், பிளவுபட்ட இரு சாராரையும் ஒற்றுமைப் படுத்தி, சுதந்திரக் கட்சியைப் பலப்படுத்தும் முயற்சியில், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தொழிற்சங்கம் இப்பொழுது ஈடுபட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக நாளை ஐந்தாம் திகதி, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் மிகப் பெரிய தொழிற்சங்கமான இலங்கை தேசிய போக்குவரத்து ஊழியர் சங்கத்தினர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா வீட்டுக்கு முன்பாகவும், திரு. அனுரா பண்டாரநாயக்கா வீட்டுக்குமுன் பாகவும் உண்ணாவிரதம் இருப்பார்கள்.

ஸ்ரீலங்கா சுதந்திரகட்சி இரு குழுக்களாக திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா குழு திருவாளர்கள் மைத்திரிபால சேனநாயக, அனுரா பண்டாரநாயக்கா குழுவாகப் பிளவு பட்டதைத்தொடர்ந்து கட்சிக்குள் 'குத்து வெட்டு'கள் உருவானதும்; இப்பொழுது நீதிமன்றம்வரை சென்றிருப்பதும் தெரிந்ததே.

நிலைமை இவ்வாறிருக்க,

[6ம் பக்கம் பார்க்க]

## திமுகவினர் கைது

சென்னை, செப். 3

இலங்கையில் அண்மையில் நிகழ்ந்த வன்செயல்களுக்கு கண்டனம் தெரிவித்து இன்று திராவிடமுன்னேற்ற கழகத்தினர் ஊர்வலம் நடத்திய போதுபொலிஸார் அவர்களைத் தடுந்தனர்.

இதைத்தொடர்ந்து 53 தி. மு. கழகத்தினர் கைதுசெய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டனர்.

தி.மு. கழகத்தினர் கைதானதைத் தொடர்ந்து ஏற்பட்ட அசம்பாவித சம்பவங்களில் சில பஸ்கள் மீது கற்கள் வீசப்பட்டன. பலர் காயமடைந்தனர். ஒரு பஸ் சாரதி கடுமையான காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

# ஜனாதிபதி, பிரதமர் பாதிக்கப்பட்ட பகுதியை பார்வையிட்டனர்!

[இரத்தினபுரி]

ஜனாதிபதி திரு ஜே. ஆர் ஜெயவர்த்தனாவும் பிரதமர் திரு ஆர். பிரேமதாசாவும் நேற்று இரத்தினபுரி, பெல்மதுளை, பலாங்கொடை ஆகிய இடங்களுக்கு விஜயம்செய்து அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் பாதிக்கப்பட்ட வீடுகள், கடைகள், நிறுவனங்கள், தோட்டங்கள் ஆகியவற்றைப் பார்வையிட்டனர்.

வன்முறையால் வீடுகளை இழந்தவர்களுக்கு குடியிருக்கக் காணி வழங்குவதாகவும், உடைமைகளை இழந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் ஜனாதிபதியும், பிரதமரும் அறிவித்துள்ளனர்.

இக்குழுவினர்சென்ற இடங்களில் பாதிக்கப்பட்ட மக்களுக்கும் இவர்கள் ஆறுதல் கூறினர். [இ]

## முதல் பரிசு

[யாழ்ப்பாணம்]

தேசிய லொத்தர் சபையின் 118வது மகாஜன சம்பத்த சுவீப்பில் முதல் பரிசான 2,50,000 ரூபா நல்லூரில் விற்பனையான டிக்கட்டுக்கு கிடைத்துள்ளது.

கண்டி அஸ்கிரியா பொலிஸ் மைதானத்தில் கடந்த 31-ம் திகதி இந்த சுவீப் இழுப்பு நடைபெற்றது.

## எழுதுமட்டுவாளில் மற்றுமொரு படுகொலை

[சாவகச்சேரி]

எழுதுமட்டுவாளில் நேற்று நிகழ்ந்த சம்பவத்தில் ஒருவர் படுகொலைசெய்யப்பட்டார். இச்செய்தி அச்சுக்குப்போகும் வரை விசாரணைகள் பூர்த்தி பெறவில்லை.

எழுதுமட்டுவாளில் தலை தூக்கிய சமூக மோதலில் இருவர் பலியானதும், பல வீடுகள் தீக்கிரையானதும் தெரிந்ததே,

சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு யாழ். அரச அதிபர் திரு. தேவநேசன் நேசையா நேற்றிரவு சென்றி

[6ம் பக்கம் பார்க்க]

## புத்தூரில் சம்பவம்: துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானர்!

[யாழ்ப்பாணம்]


நவக்கிரியைச் சேர்ந்த என். இராசையா [வயது 47] என்பவர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புத்தூர் நவக்கிரி என்னுமிடத்தில் நேற்று முன்தினமிரவு, கடை உடைத்தச் சத்தம் கேட்டதாகவும், வீட்டிலிருந்த இராசையா என்பவர் வெளியில் வந்து பார்த்தபோது துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்கானதாகவும் கூறப்படுகிறது.

பலத்த காயங்களுக்குள்ளான இவர் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ். உதவிப் பொலிஸ் அதிபர் திரு. எஸ். நவரத்தினராசா இதுசம்பந்தமாக விசாரணை மேற்கொண்டுள்ளார். [மா]

த பினான்ஸ் கொம்பனி லிமிட்டெட்
உங்கள் வீட்டுப்பாவனைக்குத் தேவையான பொருட்களைத் தவணை முறையில் வழங்குகிறது!



த பினான்ஸ் கொம்பனி லிமிட்டெட்
249/C, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 7680

## திருமண அழைப்பு

மணமகன்: திருநிறை செல்வன்
க. யோகரத்தினராஜா
(Messrs Satchithananda, Schokman, Pasupati & Co; Chartered Accountants)

மணமகள்: திருநிறை செல்வி
வ. ஆனந்தவல்லி

காலம்: 1981-09-09 புதன் மு. ப. 10-00— ந ப. 12-00 வரை
இடம்: மணமகள் இல்லம்
வரவேற்பு உபசாரம்: மணமகன் இல்லம் பி ப. 5-00 மணி

உறவினர்களும், நண்பர்களும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

| | |
|---|---|
| திரு. திருமதி | திரு. திருமதி |
| கந்தையா | வரதராஜா |
| "யோக வாசா", | (Chief Accountant, Fertiliser Complex, Zambia) |
| 11/7, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம். | 115/2, கொழும்புத்துறை மேற்கு [0835] யாழ்ப்பாணம் |

# வரி விளம்பரம்

## தேவை

பயிற்சியாளர் (Apprentices) கடைச்சல், பிற்றிங், வேல்டிங், இரும்பொற்றில் வேலைகட்கு தேவை. விண்ணப்பிக்கவும். இஞ்சினியர்ஸ், 336, மணிக் கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 0804

இனிப்பு வகைகள் தயாரிப்பதில் அனுபவமுள்ள தொழிலாளர்கள் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். அன்னை கொன்பக்ஸனரி வேர்க்ஸ், அளவெட்டி. 0831

அனுபவமும், திறமையும், நல்லொழுக்கமும் வாய்ந்த பயின்டர் உடன் விரும்பப்படுகின்றார். திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும் உடன் தொடர்பு கொள்ளவும். ஸ்ரீலங்கா அச்சகம், 234 A, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 0836

## விற்பனைக்கு

மிருசுவிலில் கத்தோலிக்க கோவிலுக்கும் கண்டி றோட்டுக்கும் அருகாமையில் குடியிருப்புக்கு உகந்த 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். வி. யோசேப், ரெலிபோன் சந்தோசி, பளை. 0805

யாழ்ப்பாணம் கந்தர்மடம் குமாரசாமி றோட்டில் (யாழ் பல்கலைக்கழகத்திற்கும் இந்து மகளிர் கல்லூரிக்கும் அண்மையில்) ஒன்றரைப் பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு நேரில் தொடர்பு கொள்ளவும். இ. இராசநாயகம், பிரசித்தநொத்தாரிஸ், 56, அத்தியடி புதுவீதி, யாழ்ப்பாணம். 0834

## தவறிவிட்டது

தாவடிப் பாடசாலைக்கும் தாவடிச் சந்திக்குமிடையில் பாவிக்கப்பட்ட இரண்டு பிலிம்றோல் பார்சல் தொலைந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். ஸ்ரீ கணேசா ஸ்ரோர்ஸ், தாவடிச் சந்தி. 0833


அரியாலை தெங்கு பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கம்

(மட்டுப்படுத்தப்பட்டது)

முகாமையாளருக்கான விண்ணப்பங்கள் முடிவு திகதி 7-9-81 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

தலைவர்,

தெ. ப. பொ. உ. வி. கூ. சங்கம்,
203, கண்டிவீதி, அரியாலை, யாழ்ப்பாணம். 0830




சக்தி செறிந்த
ஃபைசர்
பிறிமிக்ஸ் 'ஏ'
கலவைகள்

- வளர்ப்புக் கோழிகளுக்கு ப்றீடர் பிறிமிக்ஸ் 'ஏ'
- இறைச்சிக் கோழிகளுக்கு ப்றொயிலர் பிறிமிக்ஸ் 'ஏ'
- முட்டைக் கோழிகளுக்கு லேயர் பிறிமிக்ஸ் 'ஏ'

500 கிராம் பக்கெட் விலை ரூ- 28/- முதல் ரூ. 42/- வரை.

புதிதாகத் தயாரித்த கலவைகள் என்பதால் சத்துக் குறையாமல் உடன் தயாரிப்பின் உத்தரவாதமான பயன் உங்கள் கோழிகளுக்குக் கிடைக்கும் இட்டிய கோழித் தீன் வியாபாரியிடம் கேட்டு வாங்குங்கள்.

விசாரணைகள்

Pfizer ஃபைசர் லிமிட்டெட்
688, காலி வீதி, ரத்மலானை.
277, காலி வீதி, கொள்ளுப்பிட்டி.

## பெரியபுராணத் தொடர்விரிவுரை நல்லையில் இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பெரியபுராணத் தொடர் விரிவுரை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் பிரதி வெள்ளிக்கிழமையும் நடைபெற விருக்கிறது. கம்பன்கழகம் இப்பணியை மேற்கொண்டுள்ளது இன்று வெள்ளிக்கிழமை மாலை முதலாவது விரிவுரை ஆரம்பமாகும்.

தொழிலதிபர் திரு. எஸ். தியாகராசா தொடக்கவுரையும் கலாநிதி அ. சண்முகதாஸ், ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளாசியும் வழங்குவர்.

திரு. க. சிவராமலிங்கம் "மனுநீதிகண்ட சோழன்" என்னும் பொருள்பற்றி உரையாற்றுவார். (அ)

## முகமூடி அணிந்து துணிகரக் கொள்ளை

(மாங்குளம்)

மாங்குளம் முல்லைத்தீவு வீதி 2ம் கட்டையில் உள்ள பழுதடைந்த பாலத்திற்கு அண்மையில் வைத்து முகமூடியணிந்த கொள்ளையர்களால் ரூபா 13,000 துப்பாக்கி முனையில் கொள்ளையடிக்கப்பட்டது.

கொள்ளையர்கள் தலைமறைவாகியுள்ளனர். மாங்குளம் பொலிசார் பொறுப்பதிகாரி தலைமையில் கொள்ளையர்களைத் தேடி தீவிர வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

## வங்கியில் மயங்கி மரணம்

[மானிப்பாய்புரம்]

ஒய்வூதியப் பணம் பெறுவதற்கு வங்கிக்குச்சென்ற ஒருவர் ஒருவர் திடீரென ஏற்பட்ட மார்புநோவால் மரணமடைந்தார்.

உடுவிலைச் சேர்ந்த இல்வல்டர் இம்மானுவேல் (68 வயது) என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

ஒய்வூதியப்பணம் பெறுவதற்காக சுன்னாகம் இலங்கை வங்கிக்குச் சென்ற இவர் அதற்கான பத்திரங்களை நிரப்பிக்கொடுத்தபின் அங்கு காத்திருக்கையில் திடீரென மயக்கமுற்றதாகவும், உடன் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்ற சமயம் மரணமடைந்ததாகவும் விசாரணையில் தெரியவந்தது.

திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா இம்மரணம்குறித்து விசாரணை நடத்தி இவருக்கு இருதய நோய் இருந்ததாகவும், அதன் காரணமாகவே இறந்ததாகவும் தெரிவிக்கப்பட்டதை அடுத்து இருதயநோய் காரணமாக சம்பவித்த இயற்கை மரணம் என தீர்ப்பு வழங்கினார்.

சுன்னாகம் பொலிசார் விசாரணைக்கான ஏற்பாடுகளை செய்தனர். (இ)

யாழ்ப்பாண அக்கடமி
க. பொ. த.
உயர்தர பரீட்சை
ஏப்பிரல் 1982

## மீட்டல் வகுப்புகள்

வகுப்புகள் 9-9-81ல் ஆரம்பமாகின்றன. சேர விரும்புவோர் உடன் விண்ணப்பிக்கவும். 1981 பரீட்சைப் பெறுபேறுகளின் பின் மேலதிக வகுப்புகள் ஆரம்பமாகமாட்டாது.

அதிபர்

தொலைபேசி எண்: 617.
376, பிரதான வீதி,
கண்டிக்குளி, யாழ்ப்பாணம். 0758

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்:

நாளை சனிக்கிழமை (5-9-1981) இரவு 6-59 – 8-29 மணி வரையுள்ள மீனலக்கன சுபவேளையில்,

| எமது புதல்வன் | எமது புதல்வி |
| --- | --- |
| தர்மகுலசிங்கம் (மொறைஸ் ஸ்ரோர்ஸ், தோட்டக்கொடை) அவர்களுக்கும் | தனலக்ஷ்மி அவர்களுக்கும் |

மணமகள் இல்லத்தில் திருமாங்கல்யதாரணஞ் செய்யப்படும். அத்தருணம் தங்களை வருகை தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

தனிப்பட்ட அழைப்புகள் இல்லை.

தங்கள் நல்வரவை நாடும்

| | |
| --- | --- |
| திரு. திருமதி | திரு. திருமதி |
| கனகசபை, | தர்மலிங்கம், |
| சத்திரந்தை, | வேரக்குளம், |
| காரைநகர். | காரைநகர். |

0841

## மங்கலத் திறப்புவிழா

நாளை (5-9-81) காலை

"பெமிலி சொப்"

"Family Shop"

(யாழ். கனகரத்தினம் (ஸ்ராஸ்) சந்நிதிக்கு அருகாமையில்)

★ அரியாலை, கச்சேரிப்பகுதி மக்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

★ உங்கள் குடும்பத்துக்கு அன்றாடம் தேவையான சகல பொருட்களையும் பலசரக்கு உபகரணங்களையும் உங்கள் வீட்டுக்கருகாமையில் நயவிலையில் மலிவாகப் பெற்றுக் கொள்ள அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.

"பெமிலி சொப்"

425, (793) நாவலர் வீதி,
யாழ்ப்பாணம். 0819

கட்டைவேலி- நெல்லியடி ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடங்கள் நிரப்புதல்

கீழ்க்காணும் பதவி வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன:-

| பதவி | வயது |
| --- | --- |
| 1. பொதுமுகாமையாளர் தரம் 111 | — 35—50 (ஆண்கள் மட்டும்) |
| 2. கணக்கு எழுதுநர் தரம் 11 | — 25—40 |
| 3. பொது எழுதுநர் தரம் 111 | — 25—40 |
| 4. கிளைறப் பண்டசாலை முகாமையாளர் தரம் 111 | — 21—40 [ஆண்கள் மட்டும்] |
| 5. விற்பனை உதவியாளர் தரம் 11 | — 21—40 |
| 6. விற்பனையாளர் தரம் 111 | — 18—30 |

சேவையில் உள்ளவர்களுக்கு வயதுக் கட்டுப்பாட்டிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படும். சங்கச் சேவையில் உள்ளவர்களுக்கும், சங்கத் தொழிற் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.

மேற்படி பதவிகளுக்கான தகைமைகள் பற்றிய விபரங்களை சகல ப. நோ. கூ சங்கக் காரியாலயங்களிலுமுள்ள 12-05-1972ந் திகதிய 15,009/12 ஏ இலக்க வர்த்தமானியில் பார்வையிடலாம். சம்பளம் கூட்டுறவு சேவையாளர் ஆணைக்குழுவின் 24-12-80 ஆம் திகதிய 102/80 இலக்கமிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கமைய வழங்கப்படும்.

ஒரு பதவிக்கு ஒரு விண்ணப்பம் என்ற அடிப்படையில் சங்கத்தில் ரூபா 1-00 செலுத்திப் பெறும் விண்ணப்ப படிவத்தில் மாத்திரமே விண்ணப்பிக்கலாம். விண்ணப்பங்கள் யாவும் பதிவுத் தபால் மூலம் 25-09-81-ந் திகதிக்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக "தலைவர், கட்டைவேலி - நெல்லியடி ப. நோ. கூ. சங்கம், கரவெட்டி" என்னும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் மேலதிக விபரங்களுக்கு சங்கக் காரியாலயத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

கே இராமலிங்கம்
பதில் பொதுமுகாமையாளர்,

கரவெட்டி,
29-08-81. 0800

### மணிவாக்கு

உடலின் புல்லிய இயல்புகளுக்கு அடிமைப்பட்டிருப்பவன் உயர்ந்த வாழ்வுக்கு உதவான்.

—அருள்விருந்து

# நமது நோக்கு

## கல்வியில் கவனிக்க வேண்டிய கருத்து

நாம் மாணவராய் இருந்தகாலம் வேறு: இன்றைய சூழ்நிலை வேறு. கிராமச் சூழலிலே நகர மணம் வீசுகின்றது. நவீன வாழ்க்கை வசதிகள் - மின் சக்தி றேடியோ, ட. வி. போன்றவை நிறைந்து கிராமம் பட்டின வாழ்க்கைப் போக்கில் ஊன்றி நிற்கின்றது.

கல்வியென்றால் கல்லும் சாந்தும் கொண்ட கம்பீரமான கட்டடங்கள் என்ற மயக்கம் இக்காலத்தில் ஏற்பட்டிருக்கிறது. குடில்களிலும் கொட்டில்களிலும் கட்டாயம் படிக்கவேண்டுமென்பதல்லக் கருத்து. வானளாவிய கட்டடங்கள் வெறும் கல்லறைகளாகக் காணப்படுகின்றன.

இதற்கு நேர்மாறாகவுள்ள சில பள்ளிக்கூடங்களிலே மாணவரை நன்னெறியில் ஊக்குவிக்கும் தியாக உணர்வுடைய ஆசிரியர்கள் எழுத்தறிவிக்கிறார்கள். இவர்கள் தொகை குன்றுவதனால் நாட்டின்வளம் எவ்வாறிருக்குமென்பது ஆட்சியாளர் ஆய்ந்துணர்வும் பொருளன்று. அவர்களின் கவனம் "பெரிய விடயங்களை" வெள்ளை அறிக்கையில் அச்சிடுவதும், அதனைச் சுற்றி வளைத்து விவாதிப்பதும், ஈற்றில் மனம்போன போக்கில் மாற்றங்கள் அமைப்பதுமாம்.

உலகத்துமக்கள் பெரியமகான்கள் என்று மதிக்கும் பெரியவர்களெல்லாம் பெரும் மாளிகைகளிலிருந்து தங்கள் உபதேசங்களைச் செய்யவில்லை.

புத்தபெருமான் மகிமை பொருந்திய மரத்தின் நிழலில் இருந்து கொண்டுதான் உபதேசித்தார். இலங்கையிலுள்ள எந்தப் பையனும் எந்தச் சிறுமியும் வந்து படிப்பதற்குத் தகுந்த விதமாகவும் ஏற்றவிதமாகவும் கல்வி நிலையங்களின் குறிக்கோள் அமையவேண்டும்.

இலவசக் கல்வி என்ற பெயரில் மிகவும் ஏழைகளாயுற்ற குழந்தைகள் படிக்க இயலாதவாறு பள்ளிக்கூடச் செலவுகளை நாள்தோறும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.

வாழ்க்கைச் செலவில் மூழ்கி மயங்கும் பெற்றோருக்கு கல்விச் செலவு மிகப் பெரும் பாரமாகும், அத்துடன்பிரத்தியேகமான 'டியுஷன்' குடும்ப வருமானத்தின் பெருங் கழையைக் கொண்டுபோய் விடுகிறது.

பிரத்தியேகமான டியூஷன் எப்படி உருவானது? நாடெங்கும் டியூஷன் கடைகள் எவ்வாறு அமைக்கப்பெற்று செழிப்புற விளங்குகின்றன என்பது பெட்டிக் கடைக்காரன் பெரிய முதலாளியாக வந்ததை போலிருக்கும்.

ஜீ. சீ. ஈ. உயர்தரம் படித்தவர்கள் கால்வாசி பாஸ்பண்ணினவர்கள்; அரைவாசி, முற்றும் பாஸ் பண்ணினவர்கள் விசேஷ ஆங்கில பயிற்சி நிலையங்கள் நடத்தி பெரும்பொருள் சம்பாதிக்கின்றனர். நாமிங்கு பேசுவது கல்வியா, வியாபாரமா?

பொருட்களில் வியாபாரம் செய்து செல்வர்களாக வந்தவர்களை நாம் காண்பதுண்டு; சனம் பண்ணுவதுண்டு ஆனால் கல்விவர்த்தகர்கள் என்ற காசுக் கடைக்காரர்கள், கறுப்புச் சந்தை வியாபாரிகள் போன்ற சேவையை என்னென்று கொள்வது?

இந்த சமுதாய தீமை, இத்தகைய பயங்கரமான தவறு காரணமாக, வருங்காலர சந்ததியாரின் நியாயமான வெறுப்புக்கு நாம் ஆளாக நேரிடும்.

இன்று நாம்வாழும் சமுதாயத்தில் மேனாட்டு பிற நாட்டுத் தொடர்புடைய மக்கள், முழுக் குடும்பங்கள், நன்றாகக் கலந்து வாழ்கின்றனர், இதனால் வாழ்க்கை முறையில் - புறவாழ்க்கை - பல மாற்றங்கள் காணப்படுகின்றன. இவையெல்லாம் எங்கள் சீரிய பண்பாட்டுக்கு உகந்தவையல்ல.

நவீன நாகரிகம் என்னும் மோகத்திலே மயங்கி, எமது சொந்தப் பழக்கவழக்கங்கள் யாவற்றையுமே பலர் இகழ்ந்து ஒதுக்குகிறார்கள். வாழ்க்கை முறையிலும் கடைப்பிடிக்காது தள்ளி விடுகிறார்கள், இது ஒருவிதமான தொற்று நோய். காலரா என்றவுடன் அஞ்சி தடைப்பாதுகாப்புக்கு அவசரப்படுகிறோம், இதற்கு எவ்வித பாதுகாப்புமில்லை.

நமது முன்னோரின் நடையுடை பாவனைகள் யாவும் மூடப் பழக்கவழக்கங்கள் என்று எண்ணுவது தவறு என்பதை இன்றைய வாழ்க்கை நெருக்கடி நிரூபிக்கின்றது.

மூடப் பழக்கவழக்கங்கள் அல்லாதவற்றை நன்கு புரிந்துகொண்டு அவற்றை நடைமுறையில் அனுட்டிப்போமானால் அவை நல்வாழ்வைத் தரும்.

வீட்டில் உணவுக்குரிய தோட்டமும், எரிபொருளுக்கு காட்டின் விறகும் வேலியில் படரும் போஷாக்கு நிறைந்த பச்சை இலை குழைகளும் சுங்கிள் சுய நல முயற்சியால் நெய்த ஆடையும், கட்டிய வீடும், பயன்தரும் கல்வியைக் குறிக்கின்றன.

கால்நடையில் சைக்கிளில் போகக்கூடிய தூரத்துக்கு தனியாருடைய மெத்தை அமைத்த உல்லாசமான பஸ் வண்டியைக் காத்திருத்தல் இன்றைய கல்வியின் தோல்வி நிலைக்கு சான்று பகர்கின்றது.

# அமெரிக்க சோதனைகளுக்கு ஐரோப்பாதான் களமா?

கோப்பன் ஹேகனிலிருந்து வெளிவரும் தினசரி ஒன்று அண்மையில் ஜனாதிபதி றேகனின் முழுப்பக்க உருவப் படத்தை வெளியிட்டு அதற்குக் கீழ் 'கிரேசி' (பைத்தியம்) என்ற வாசகத்தை பொறித்திருந்ததாம்.

இந்தத் தகவலை பிரபல அமெரிக்க வாரசஞ்சிகை 'நியூஸ்வீக்' அண்மையில் வெளியிட்டது. [24-8-81]

உலகத்திலேயே செல்வத்திலும், வல்லமையிலும் முன்னணி நாடாக விளங்கும் அமெரிக்கவின் ஜனாதிபதிக்கு இத்தகைய அடைமொழிகளால் 'அபிஷேகம்' செய்யும் அவலநிலை எவ்வாறு உருவாகியது?

நான் மேலே குறிப்பிட்ட 'நியூஸ்வீக்' இதழின் அட்டையில் கொட்டை எழுத்தில் பின்வரும் வாசகம் பொறிக்கப்பட்டிருக்கின்றது. 'ஐரோப்பா எதிர் குண்டு'

ஆமாம் 'நியூட்ரன்' குண்டு உற்பத்திக்கு றேகன் பச்சை விளக்கு காட்டியிருப்பதே இவ்வாறான வசைமாரிக்கு வழிகோரியுள்ளது அம்ஸ்ரடாமில் ஆர்ப்பாட்டக்காரர் அவருக்கு 'நியூட்ரன் கௌபோய்' என்ற 'திருநாமத்தை' சூட்டியுள்ளனர்.

இத்தகவல்களை எல்லாம் தரும்பொழுது ஐரோப்பாவிலே போரை வெறுக்கும் சமாதான விரும்பிகளின் இயக்கம் நாளுக்குநாள் வலுப்பெற்று வருகின்றது என 'நியூஸ்வீக்' அங்கலாய்ப்பதை ஊகிக்கக்கூடியதாக இருக்கின்றது டென்மார்க், நோர்வே, பெல்ஜியம், மேற்கு ஜெர்மனி, ஒல்லாந்து, பிரிட்டன் ஆகிய நாடுகளிலே றேகனின் முடிவை எதிர்த்து பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடந்திருக்கின்றன. ஐரோப்பாவிலே அணு ஆயுத எதிர்ப்பு அணி மீண்டும் வீறு நடை போடுகின்றது போரொழிப்பு கோட்பாட்டாளர் அணி திரண்டு 'நேட்டோவிற்கு' பெரும் சவால் விடுத்து வருகின்றனர் என 'நியூஸ்வீக்' குறிப்பிடுகின்றது.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்களுக்கும், அணிதிரட்டல்களுக்கும், லோகங்களுக்கும் பின்னால் ஐரோப்பாவில் வாழும்பெரும்பலானமான மக்கள் நிற்கின்றனர். மௌனமாக இந்த எதிர்ப்பியக்கத்திற்கு ஆதரவு நல்கின்றனர் என்ற உண்மை தான் 'நியூஸ்வீக்'கிற்கு பெரும் சஞ்சலத்தை ஏற்படுத்தியுள்ள.

சோசலிசவாதிகள் மட்டுமல்ல அராஜகவாதிகள் இயற்கைச் சூழலைப் பேணுவதில் அக்கறையுள்ளவர்கள், கைத்தொழில் யுகத்தின் விழுமியங்களை வெறுக்கும் அன்னியமயப்படுத்தப்பட்ட இளைஞர்கள், சமயக்குழுக்கள் - இவ்வாறான பல்வேறுபட்டவர்கள் அணு ஆயுத - குறிப்பாக 'நியூட்ரன்' குண்டு எதிர்ப்பியக்கத்தில் ஒருங்கிணைந்துள்ளனர்.

**- வெளியான் -**

இதற்குச் சான்றாக இவ்வாண்டிலே நடாத்தப்பட்ட சமாதானதிற்கான ஊர்வலத்தைக் குறிப்பிடலாம். கோப்பன் ஹேகனில் தொடங்கிய இந்த ஊர்வலம் 750 மைல்களைக் கடந்து ஆறு வாரங்களுக்குப் பின்னர் பாரீஸில் முடிவுற்றது. ஊர்வலத்தின் முடிவு நாளான ஆகஸ்ட் 6 ஹிரோசீமா அணுக்குண்டினால் அழிக்கப்பட்ட 36வது ஆண்டினை நினைவு கூர்வதாய் அமைந்தது.

இவ் வெதிர்ப்பு இயக்கம் பொதுவாக அமெரிக்காவிற்கு எதிரான ஒன்றாக விளங்குகின்றது என 'நியூஸ் வீக்' குறிப்பிடுகின்றது, ஆனால் இதனை மறுக்கின்றார் அணுவாயுத எதிர்ப்பு இயக்கத்தைத் தொடக்கி வைத்த பேர்ட்றலரஸலின் வாரிசாகக் கருதப்படும் புகழ்வாய்ந்த பிரிட்டிஷ் வரலாற்று ஆசிரியர் ஈ பி. தொம்சன்: இது சோவியத்திற்குச் சாதகமான இயக்கமுமல்ல அமெரிக்காவிற்கு எதிரான இயக்கமுமல்ல என்பதை நான் திட்டவட்டமாகஅழுத்த விரும்புகின்றேன். தம்மை எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் பொறுப்பை அமெரிக்கரிடம் ஒப்படைக்காது ஐரோப்பியர் தாமே தமது பிரச்சினைகளை தீர்ப்பதற்கான முயற்சியே இந்த இயக்கம். ஐரோப்பாவிலுள்ள நாம் எமது தலைக்கு மேலே நடைபெற்று வரும் வாதப் பிரதி வாதங்களின் நடுவில் அகப்பட்டுக்கொண்டோம். செத்துப்பிறந்த மார்க்கீய வாதிகளுக்கும் மறுபிறப்புப் பெற்ற கிறீஸ்தவர்களுக்குமிடையே இச்சர்ச்சை நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது''.

இந்த எதிர்ப்பாளரை 'அழுமூஞ்சிகள்' என அமெரிக்க அதிகாரபீடம் கருதுவதாக 'நியூஸ்வீக்' குறிப்பிடுகின்றது.

''அழுதாலும் பிள்ளை அவளே பெறவேண்டும்'' என்பார்கள். இரண்டு உலகப் போர்களால் ஐரோப்பியரே நேரடியாகப் பெரிதும் பாதிக்கப்பட்டனர். இதுவரையிலும் அமெரிக்கா நேரடியான போர்ப் பாதிப்பை அனுபவிக்கவில்லை ஆதலால் தமக்கு எந்தவித ஆபத்தும் ஏற்படாமல் அணு ஆயுதப் போரில் தாம் வெற்றி பெறலாம் என்ற மமதையில் அது மூழ்கியிருப்பதாக தொம்சன் சுட்டிக்காட்டியுள்ளார். உண்மையில் இது ஒரு பைத்தியக்கார எண்ணம் என அவர் மேலும் கூறுகின்றார்.

கடைசி பிரெஞ்சுக்காரன் இறக்கும்வரை பிரிட்டன் போர் புரிகின்றது என நக்கலாக முன்பு கூறுவது வழக்கம். அமெரிக்காவின் இன்றைய போக்கை நோக்குகையில், இக்கூற்றைச் சற்று மாற்றி, கடைசி ஐரோப்பியன் இறக்கும்வரை அமெரிக்கா அணு ஆயுதப் போரில் ஈடுபடத் தயாராக இருக்கின்றது என்பது தெட்டத்தெளிவு.

## "வங்கியில் கடன் பெற வெட்கப்பட்க் கூடாது"

### - யாழ். மாவட்ட அமைச்சர்

[புலோலி]

''வர்த்தகக்கைத்தொழிற்துறைகளை ஊக்குவித்து நாட்டை அபிவிருத்திப்பாதையில் இட்டுச் செல்வதற்கு வங்கிகள் உதவிபுரிகின்றன. வங்கிகளின் சேவைகளை மக்கள்பெற்றுச் சிறப்பாகச் செயற்படவேண்டும்''.

இவ்வாறு பருத்தித்துறையில் மக்கள் வங்கிக்கிளையைத் திறந்து வைத்து உரையாற்றிய யாழ். மாவட்ட அமைச்சர்திரு யூ பி விஜயக்கோன் குறிப்பிட்டார். பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள வீரவாகு கட்டிடத்தில் இவ்வங்கிக்கிளை திறந்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வடபிராந்திய மக்கள் வங்கி முகாமையாளர் திரு. என். எஸ். பி. ஆனந்தன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தொடர்ந்து உரையாற்றிய மாவட்ட அமைச்சர்குறிப்பிட்டதாவது;

பல தொழில் துறைகளை ஆரம்பிப்பதற்கு பணம் இல்லாமையினால் அத்தொழில் துறைகள் ஆரம்பிக்சப்படுவது பின் போடப்பட்டுவிடுகிறது. இந்நிலைகளிலே மக்களுக்கு வங்கிகள் பேருதவி புரிகின்றன. வங்கிகளின் நடவடிக்கைகள் இன்று மக்களின் வாழ்க்கையுடன் இணைந்துள்ளன.

''மக்கள் வங்கிகளின் சேவைகளை நன்கு பயன்படுத்தவேண்டும். மக்கள் வங்கி மக்களுக்குச் சிறந்த சேவைகளை வழங்கி வருகின்றது. வங்கியில் மக்கள் கடன பெறுவதற்கும் பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்துதற்கும் தயக்கமோ, வெட்கமோ கொள்ளக்கூடாது.

''இப்பகுதிகளில் பல்வேறு துறைகளில் முதலீடு செய்யப்படும்போதுதான் இப்பகுதிகள் அபிவிருத்தியடையும். இதற்கு வங்கிகள் உங்களுக்கு உதவ காத்திருக்கின்றன. மக்கள் இதைக் கருத்திற்கொண்டு சிறப்பாகச் செயற்படவேண்டும் ''

வடபிராந்திய மக்கள் வங்கி உதவி முகாமையாளர் திரு. எஸ். இராசேந்திராவும் பேசினார்.

இவ்வங்கிக் கிளையில் முதலாவது நடைமுறைக் கணக்கைப் பருத்தித்துறைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பில் அதன் தலைவர் திரு. எஸ். வல்லிபுரமும், இரண்டாவது கணக்கை வர்த்தகர் திரு. மு. பொ. வீரவாகுவும் ஆரம்பித்தனர்.

இம்மக்கள் வங்கிக் கிளை யாழ். மாவட்டத்தில் 21-வது வங்கிக் கிளையாகும் என்பது குறிப்பிடத்தக்கது. [அ]

## இன்று திறக்கப்படும் இரு பணிமனைகள்

[யாழ்ப்பாணம்]

வேலணை உதவி அரசாங்க அதிபர் சுற்றுலா பணிமனை புங்குடுதீவில் இன்று திறக்கப்படவிருக்கிறது இப்பணிமனைக்கான கட்டிடத்தை புங்குடுதீவு சர்வோதய இயக்கம் இலவசமாக வழங்க முன்வந்துள்ளது.

ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் இதற்கான வேண்டுகோளை விடுத்திருந்தார்

யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். எஸ். தர்மபாலன் திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளார்.

### காரைநகரில்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் சுற்றுலாப் பணிமனை காரைநகரில் இன்று திறந்துவைக்கப்படவிருக்கிறது.

யாழ் மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான திரு. தேவநேசன் நேசையா இப்பணிமனையைத் திறந்து வைப்பார். [மா]

## மீண்டும் தலைவர்

[சுழிபுரம்]

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் திரு. கே அருணாசலம் வட மாகாண பாடசாலைகள் அதிபர்கள் சங்கத் தலைவராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். திரு. என் மகாதேவா செயலாளராக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மூன்று லட்சம் ரூபா பெறுமதியுள்ள

# சட்டவிரோதமான மரங்களை பொலிஸார் கைப்பற்றினர்

## 15 பேருக்கு விளக்கமறியல்

[மட்டக்களப்பு]

கிழக்குப்பிராந்திய பொலிஸ் அதிபரின் விசேட உத்தரவின் பேரில் விரைந்த பொலிஸ் கோஷ்டியினர் வாழைச்சேனை, புனானை, ஓட்டமாவடி ஆகிய பகுதியிலுள்ள 7 தனியார் மரஆலைகளில் நடத்திய திடீர்வேட்டையின்போது சுமார் மூன்று லட்சம் ரூபா பெறுமதியான மரங்களும், மரப்பொருட்களும் சட்டவிரோதமான முறையில் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

ஏறுவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு. உபநேந்திரா, இன்ஸ்பெக்டர் திரு. மோகன்தாஸ், சார்ஜன்ட் திரு மாணிக்கராசா ஆகியோர் அடங்கிய குழுவினர் தான் இத்தேடுதல்வேட்டையில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 15 பேர் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி ரி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரத்தில் இன்ஸ்பெக்டர் திரு. மோகன்தாஸ் கிரான் பகுதியிலுள்ள நான்கு மர ஆலைகளில் நடத்திய மற்றுமோர் திடீர் வேட்டையின்போது பல ஆயிரம் ரூபா பெறுமதியான மரங்கள் சட்டவிரோதமான முறையில் வைத்திருப்பதைக் கண்டுபிடித்தார்.

இது தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் எட்டுப்பேரும் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. ரி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு பிணையில் விடப்பட்டுள்ளார்கள். [க]

## மைத்துனரின் கடையில் நம்பிக்கை மோசடியாம்

### ஒருவர் கைது; துணிகளும் மீட்பு

[மட்டக்களப்பு]

மைத்துனரின் புடவைக்கடையை நம்பிக்கையின்பேரில் நிர்வகித்து வந்த ஒருவர் சுமார் ஒரு லட்சம் ரூபாய் பெறுமதியான துணிவகைகளை மோசடி செய்தாராம்.

இதுதொடர்பாக காத்தான்குடி மத்திய வீதியைச் சேர்ந்த உமர்லெப்பை சீனி முகமட் என்பவரை மட்டக்களப்பு பொலிசார் சந்தேகத்தின்மீது கைதுசெய்துள்ளனர்.

காத்தான்குடியைச் சேர்ந்த ஜனுப் அகமட் மொகமடீன் மொகமட் அபூபக்கர் என்பவர் தனது சொந்த அலுவல் காரணமாக கொழும்பு செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டதால் இரண்டு மாதங்களுக்கு முன்னர் தனது மைத்துனரிடம் புடவைக்கடையை நிர்வகிக்கும் பணியை ஒப்படைத்தாராம்.

சில தினங்களின்பின்னர் கடையைப் பார்வையிட்டபோது உயர்ந்தரக துணி வகைகள் குறைந்திருப்பதை அவதானித்து கணக்கெடுப்பு நடத்தியபோது சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான துணி வகைகள் குறைந்து காணப்பட்டது. அதற்குரிய வரவு எதுவும் இல்லையாம்.

மட்டக்களப்பு பொலிசார் சந்தேகத்தின்பேரில் சீனி முகமட்டைக் கைதுசெய்து விசாரணை செய்தபோது அத்துணி வகைகள் வாழைச்சேனையில் உள்ள புடவைக்கடையொன்றில்விற்பனைசெய்யப்பட்டதை கண்டுபிடித்தனர். சுமார் 75 ஆயிரம் ரூபா பெறுமதியான துணிவகைகளை பொலிசார் கைப்பற்றியுள்ளனர்.

சந்தேக நபரை மட்டக்களப்பு குற்றத்தடுப்புபொலிஸ் பிரிவைச்சேர்ந்த திரு. எஸ். பரமலிங்கம் மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. தி. சுந்தரலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்தபோது இம்மாதம் 14-ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். [இ]

## மாநகரசபை கௌரவிக்கும்

[யாழ்ப்பாணம்]

மன்னார் ஆயர் பேரருட் திரு சௌந்தரநாயகம் அடிகளாருக்கு யாழ். மாநகர சபை இம்மாதம் 8-ம் திகதி தேநீர் விருந்து கொடுத்துக் கௌரவிக்கவிருக்கிறது. [ஸ]


## மிகவும் குறைந்த விமானக் கட்டணத்தில்

°° மத்தியகிழக்கு °° சிங்கப்பூர்
°° பாரிஸ் °° நைஜீரியா
°° லண்டன் ரூபா 7,500-00 (ஒருவழி)
ரூபா 14,205-00 (இருவழி)

மற்றும் ஐரோப்பிய நாடுகளுக்கும்

உலகின் எப்பாகத்துக்கும்

°° எவ்வித கூடுதல் கட்டணமுமின்றி நீங்கள் விரும்பிய விமானத்தில் பிரயாணஞ் செய்வதற்குரிய

விமான டிக்கட்டுகள்

வங்கியில் அறவிடப்படும் அதே கட்டணத்தில் அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் பிரயாணக் காசோலைகள்

★ நைஜீரியன் விசா

ஆகியவற்றைக் கொழும்பு செல்லாமல் யாழ் நகரிலேயே பெற்றுக்கொள்ளப் பிரபல்யமான MACKINNON, MACKENZIE & Co. of CEYLON LIMITEDன் ஒரேயொரு யாழ்ப்பாணக் கிளையான எங்களை நாடுங்கள்

மக்கினென்ஸ் ட்றவல் சேவிஸ் (சிலோன்) லிமிட்

8, பருத்தித்துறை வீதி - யாழ்ப்பாணம்.
த. பெ. எண் 92 தொலைபேசி: 8154


## விக்கிரமசிங்கா பூதவுடல்: பொதுமக்கள் அஞ்சலி

[கொழும்பு]

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டாக்டர் விக்கிரமசிங்காவின் பூதவுடல் நாளைக் காலை மாத்தறைக்கு எடுத்துச் செல்லப்படவிருக்கிறது.

டாக்டர் விக்கிரமசிங்காவின் பூதவுடல் நேற்று மாலை 4-20 மணிக்கு மாஸ்கோவிலிருந்து கட்டுநாயக்கா விமானநிலையத்தை வந்தடைந்தது.

அரசு சார்பில் புடவைக் கைத்தொழில் அமைச்சரும்கட்டான எம்.பியுமான திரு அபயவர்த்தன, அக்குரஸ பாராளுமன்ற உறுப்பினர் திரு. தயானந்த விக்கிரம, மதவாச்சி எம். பி. திரு. மைத்திரிபால சேனநாயக்கா, தமிழர் விடுதலைக்கூட்டணித் தலைவர் திரு. எம். சிவசிதம்பரம், டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, திரு. பீட்டர் கெனமன், திரு. சரத்முத்தட்டுவேகம மற்றும் வெளநாட்டுத் தூதராலய பிரதிநிதிகள் விமானநிலையத்தில் சமுகமளித்திருந்தனர்.

டாக்டர் விக்கிரமசிங்காவின் சடலத்தைத் தாங்கிய பேழையுடன்அவரது பாரியார் திருமதி டொரின் விக்கிரமசிங்காவும் வந்திருந்தார்.

பொறளை கொட்டாவீதியிலுள்ள கம்யூனிஸ்ட் கட்சித் தலைமை காரியாலயத்தில் நேற்று மாலை மக்கள் அஞ்சலிக்காக டாக்டர் விக்கிரமசிங்காவின் பூதவுடல் வைக்கப்பட்டது.

நாளை அதிகாலை 5 மணி வரை மக்கள் அஞ்சலி செலுத்திய பின்னர் அவரது சொந்த ஊரான மாத்தறை தொகுதிக்கு மோட்டார் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்படும். [க]

## ரயில் சம்பவம்: பொலிஸ் அதிகாரிக்கு வலைவீச்சு

[கொழும்பு]

காங்கேசன் துறையிலிருந்து கொழும்புக்கு கடந்த செவ்வாய்க்கிழமை காலையில்சென்ற ரயிலில் நிகழ்ந்த ஒரு சம்பவம் குறித்து முழு அளவில் புலன் விசாரணைகளை நடத்தும்படி பாதுகாப்பு அமைச்சு உத்தரவிட்டிருக்கின்றது. இச் சம்பவத்தில் தொடர்புடையவர் என்று கருதப்படும் இளம் உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒருவரை கண்டு பிடிக்கும்படி சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அமைச்சு தகவல் அனுப்பியுள்ளது. குறிப்பிட்ட ரயில் பயணம் செய்த இந்த உதவிப்பொலிஸ் இன்ஸ்பெக்டர் மேற்படி சம்பவத்தையடுத்து அனுராதபுரத்தில் வைத்துத் தலைமறைவாகியுள்ளாராம்.

சம்பவம் இடம்பெற்ற பொழுது ரயிலில் பிரயாணம் செய்த ராணுவத்தின் நான்காவது பொறிஇயல் பிரிவைச் சேர்ந்த இரு வீரர்கள் இது பற்றி அனுராதபுரம் பொலிசில் புகார் செய்துள்ளனர்:

செவ்வாய்க்கிழமை அதிகாலை 1-30 மணியளவில் ரயில் வவுனியாவை அண்மித்த பொழுது துப்பாக்கிப் பிரயோகச்சத்தம் ஒன்றைக் கேட்டதாகவும் எந்தப் பெட்டியிலிருந்து அச்சத்தம் வந்தது என்பதைக்கண்டுபிடித்து அங்கு விரைந்ததாகவும், சாதாரண உடையில் ஒரு இராணுவ வீரரையும் அவர் கையில் ஒரு துப்பாக்கியையும் கண்டதாகவும் அத்துப்பாக்கியிலிருந்து சற்று முன்னர்தான் வெடி தீர்க்கப்பட்டிருக்க வேண்டுமெனக் கருதியதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். அந்தப் பெட்டியில் இரு சப் இன்ஸ்பெக்டர்கள் அருகில் அமர்ந்திருந்ததைக் கண்டதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அந்தத் துப்பாக்கி அங்கிருந்த சப் இன்ஸ்பெக்டர் ஒருவருடையதென்று அந்த இராணுவ வீரர்தங்களிடம் தெரிவித்ததாகக் கூறியுள்ள மேற்படி இரு வீரர்களும் அனுராதபுரத்தில் ரயிலை நிறுத்தி சம்பந்தப்பட்ட மூவரையும் பொலிசில் ஒப்படைக்க முடிவுசெய்து கொண்டு அடுத்த பெட்டிகளில் பயந்துபோயிருந்த பிரயாணிகளை அமைதிப்படுத்துவதற்காகச் சென்றதாகவும், திரும்பிவந்து பார்த்தபோது சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் தலைமறைவாகி விட்டதாகவும், அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர். மற்ற இரு நபர்களையும் துப்பாக்கியையும் தோட்டாக்களையும் பொலிசில் ஒப்படைத்துள்ளனர்.


## தணிக்கை

பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினால் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை இப்பொழுது அமுலில் உள்ளது.


## வேலைவாய்ப்பு குழுக்கூட்டம்

[யாழ்ப்பாணம்]

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் நிறைவேற்றுக்குழுவின் வேலைவாய்ப்பு, உணவு கூட்டுறவுப்பகுதிகளுக்கான குழுக்கள் இன்றுகாலை கூடவிருக்கின்றன.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் தலைவரும் நிறைவேற்றுக்குழுவின் உறுப்பினருமான திரு சு' நடராசா தலைமையில் யாழ். செயலகத்தில் இக்கூட்டம் நடைபெறும். பிற்பகல் திட்டமிடல் பகுதிக்கான கூட்டம் நடைபெறும்.

## குருவாக அபிஷேகம்



[யாழ்ப்பாணம்]

புங்குடுதீவைச்சேர்ந்த அருட் திரு. வின்சன் பற்றிக் இன்று குருவாக புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலயத்தில் வந்தனைக்குரிய யாழ் ஆயர் கலாநிதி வ. தியோகுப்பிள்ளையால் திருநிலைப் படுத்தப்பட விருக்கிறார். [க]

## இன்று

[யாழ்ப்பாணம்]

உடுவில் மல்வம் ஸ்ரீ இராஜேஸ்வரி அம்பாள் கும்பாபிஷேகப் பெருவிழா இன்று அதிகாலை 5 மணியளவில் நடைபெறவிருக்கிறது.

ஸ்ரீ அம்பாள் இந்துமகாசபையின் முயற்சியில் ஆலயப்புனருத்தாரணம் நிறைவுபெற்று கும்பாபிஷேகம் நடைபெறுகிறது.

## 4 இளைஞர்கள்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யில் விடுதலை செய்யப்பட்டனர். கதிரவேலு தேவானந்த் இம்மாதம் 14-ந் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கொழும்பு பதில் நீதவான் பிணை அனுமதியை வழங்கினார் [ம]

## சுதந்திரக்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கட்சியை ஒரே தலைமையின் கீழ் கொண்டுவருவதில் தீவிர முயற்சிகள் நடைபெற்றுவருகின்றன. முதற்கட்டமாக ஒரு நாள் உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படவிருக்கிறது.

ரோஸ்மிட் பிளேஸிலுள்ள 63-ம் இலக்க திரு அனுரா பண்டாரநாயக்கா இல்லத்துக்கு முன்பாகவும், 65-ம் இலக்க திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இல்லத்துக்குமுன்பாகவும் ஐந்தாம் திகதி காலை சுதந்திரக் கட்சி தொழிற்சங்கவாதிகள் ஒரு நாள் உண்ணாவிரதம் அனுஷ்டிப்பார்கள். [ம]

## எழுதுமட்..

(1ம் பக்கத் தொடர்ச்சி]

ருந்தார்.

எழுதுமட்டுவாளில் முன்னர் நிகழ்ந்த சம்பவத்தில் டஸ் சாரதியும் வர்த்தகர் ஒருவரும் கொலைசெய்யப்பட்டனர்.

இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஸ்ரீ செப்டம்பர் 4-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126.